## முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.527/2018 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 03-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னுசாமி | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **வா.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கு அருகில் நான் குடியிருந்தேன், அந்த வகையில் வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும். தாவா சொத்து ஆதியில் நாமகிரியம்மாள் என்பவருக்கு பாத்தியம். மேற்படி நாமகிரியம்மாளுக்கு பொன்னம்மாள் என்ற ஒரே மகள் மட்டும்தான் வாரிசு. பொன்னம்மாளுக்கு இரண்டு மகன்கள். முதல் மகன் நரசிம்ம ஐய்யங்கார். இரண்டாவது மகன் வரதாச்சாரி. வரதாச்சாரி திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். நரசிம்ம ஐய்யங்காருக்கு 4 ஆண் மக்கள், 2 பெண் மக்கள். அவர்களது பெயர்கள் சீனிவாசன், ரங்காச்சாரி, செல்லப்பன், ராமானுஜம் ஆகும். பெண்கள் பாமா மற்றும் கோகிலா ஆகும். இந்த வழக்கின் வாதி விஜயராகவன் சீனிவாசனின் மகன் ஆவார். சீனிவாசன், ரங்காச்சாரி அவர்களது குடும்பம்தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர்.